

> “
> **நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் வளர்ச்சிக்காக தீட்டும் திட்டங்களை நமது மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.**
> ”

திருமதி **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
**செயல் இயக்குநர்,**
**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைவருக்கும் இனிய வணக்கம். மகளிர் வாழ்வாதாரம் வளம் பெறவும், அவர்கள் பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனும் 1989ஆம் ஆண்டு துவக்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கமானது இன்று “சிறு துளி பெருவெள்ளம்” என்பது போல் அசுர வளர்ச்சி பெற்றுள்ளது என்பதையும், இவ்வளர்ச்சிக்கு காரணம் நீங்கள்தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் வளர்ச்சிக்காக தீட்டும் திட்டங்களை நமது மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். கிராமப்புறத்தில் வசிக்கும் ஏழை எளியவர்கள் மட்டுமல்லாது, நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கும் தேவையான நலத் திட்டங்கள் பலவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் போன்றவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களின் வெற்றிக் கதைகள், கூட்டமைப்புகளின் செயல்பாடுகள், அரசின் நிகழ்வுகள், நலத் திட்டங்கள் போன்றவற்றை நமது மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் முற்றம் இதழில் வெளியிடப்பட்டு வருகிறது என்பது நமக்குத் தெரியும்.

வெள்ளி விழாவை நோக்கி வெற்றி நடைபோடும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் இதழானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் ஓராண்டு சாதனைகள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் உள்ளிட்ட சிறப்பம்சங்களைக் கொண்ட சிறப்பிதழாக இம்முறை வெளிவருவது பாராட்டுக்குரியது.

சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் என்பதைக் கூறிக்கொள்வதுடன், முற்றம் இதழின் சிறப்பிதழுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்,

(செயல் இயக்குநர்)

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ.15 மலர் 24 இதழ் 5 ஆகஸ்டு - செப்டம்பர் 2022

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **எம்.அருணா,** இ.ஆ.ப.,
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
திருமதி. **க.முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர்
**பா.செல்வராஜன்,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **சி. சுஜாதா ஜேக்கப்,** கூடுதல் இயக்குநர்,
திருமதி. **எஸ்.கவிதா,** கூடுதல் இயக்குநர்,
**நா.அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், (TNRTP)

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
**வா.ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

கணினி வடிவமைப்பு
**ஸ்ரீ மூகாம்பிகை ஹைடெக் பிரிண்ட்ஸ்**

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**
'முற்றம்',
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412

**முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.**

## சுதந்திர தின அமுத விழா காணும் அற்புத திட்டங்கள்

அன்புள்ள வாசகர்களுக்கு,

நாம் இந்திய திருநாட்டை 1947–ம் ஆண்டு வெள்ளையர்களிடமிருந்து மீட்டெடுத்து 75 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, இந்த ஆண்டு அமுதவிழாவாக கொண்டாடுகிறோம். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் சுதந்திர காற்றை அனுபவித்து கொண்டிருக்கும் நாம் சுதந்திரத்திற்காக தியாகம் செய்த அனைவருக்கும் முழு மனதுடன் நன்றியை சமர்ப்பிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும். நலிந்து கிடந்த இந்த நாட்டை சுதந்திரம் பெற்ற 75 ஆண்டுகளில் சிறப்பான நாடாக உருவாக்குவதற்கு மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் பல முயற்சிகளை மேற்கொண்டு சிறப்பான சாதனைகளை செய்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சிறப்பான மற்றும் அமைதியான ஆட்சி நடைபெற்று வருகிறது. மக்களுக்கு நன்மை பயக்கும் பல சட்டங்களையும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

மக்களை அச்சுறுத்தி ஆட்டிப் படைத்து வந்த கொரோனா என்ற பெருந்தொற்றை ஒழிப்பதற்கு, ஆட்சி பொறுப்பேற்ற கையோடு அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டது மட்டுமல்லாமல், மருத்துவர்களே பயந்து நடுங்கும் கொரோனா தீவிர சிகிச்சைப் பிரிவிற்குள் உயிருக்கு பயப்படாமல் துணிச்சலாக சென்று ஆய்வு செய்த முதல்வர் அனைத்து தரப்பினரின் பாராட்டையும் பெற்றுள்ளார். அதோடு கொரோனா காலத்தில் எவ்வித வாழ்வாதாரமும் இன்றி தவித்த மக்களுக்கு ரூ.4,000/– உதவித் தொகையாக வழங்கியது பெரும் உதவியாகும்.

பெண்கள் அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்வதற்கான சட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன் தள்ளுபடி மற்றும் ரூ.20,000 கோடி கடன் வசதி, பிரசவித்த பெண்களுக்கு 12 மாதங்கள் பேறுகால விடுப்பு ஆகியவைகளை வழங்கியது ஏழை மற்றும் நடுத்தர குடும்ப பெண்களுக்கு கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாகும். மேலும், கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் பெண்களுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளார். தகுதியான குடும்பத் தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் உதவித் தொகை வழங்கும் திட்டமானது பரிசீலனையில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பொங்கல் திருநாளை மகிழ்ச்சியாக கொண்டாடுவதற்கு தரமான பொருட்களை வழங்கியது, 1 முதல் 5–ம் வகுப்பு வரை பயிலும் பிஞ்சு குழந்தைகள் மூளை வளர்ச்சி பெற்று, திடமாக வளர சத்தான காலை சிற்றுண்டி வழங்கும் முன்னோடி திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது என அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொண்டுள்ளதை காட்டுகின்றது.

எந்த ஒரு திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட துறைக்கான வல்லுநர்கள் அடங்கிய குழுக்களை உருவாக்கி, அக்குழுவினர் கொடுக்கும் பரிந்துரைகளை பரிசீலனை செய்து, சரியான முடிவை எடுத்து வருகிறார். இதுவே மக்களாட்சியின் நேர்மையான அணுகுமுறையாகும். உதாரணமாக நீட் தேர்வு, மத்திய அரசின் கல்வி கொள்கை, சமூக நீதிக் கண்காணிப்பு ஆகியவைகளை ஆராய குழுக்களை அமைத்துள்ளார்.

75–வது ஆண்டு சுதந்திர தின அமுத விழா கொண்டாடும் இவ்வேளையில் முற்றம் தனது 25–வது ஆண்டு வெள்ளி விழாவை கொண்டாடுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைவருக்கும் முற்றத்தின் சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

# ஓராண்டு ஆட்சியில்... நூறாண்டு சாதனை...!



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழக மக்களின் வாழ்வின் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் பிறப்பித்த 5 முக்கிய அரசாணைகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சராக திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றவுடன், **07.05.2021** அன்று தலைமைச் செயலகத்திற்கு வருகை புரிந்தார்கள். அவரை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர். முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வாழ்வில் புது ஒளியை ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட **5** முக்கிய அரசாணைகளைப் பிறப்பித்தார்கள்.

1. கொரோனா அச்சுறுத்தல் உயர்ந்து வரும் நிலையில், மக்களின் இன்னல்கள் தொடர்வதால் தமிழக மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் **4,000** ரூபாய் வழங்கப்படும் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, சுமார் **2,07,67,000** குடும்ப அட்டைதாரர்களுக்கு **4,153.39** கோடி ரூபாய் செலவில் **2,000** ரூபாய் வீதம் நிவாரண தொகை முதல் தவணையாக மே மாதத்திலேயே வழங்கும் ஆணையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையொப்பமிட்டுள்ளார்கள்
2. தேர்தல் அறிக்கையில் அளித்திருக்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மக்களின் நலன் கருதி, ஆவின் பால் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் **16.5.2021** முதல் குறைத்து விற்பனை செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாணை பிறப்பித்துள்ளார்கள்.
3. தேர்தல் வாக்குறுதியில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்பினைச் செயலாக்கும் வகையில், தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் **08.05.2021** முதல் பயணம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.
4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது மாவட்டந்தோறும் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது ஆட்சிக்கு வந்த **100** நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும் என்கிற வாக்குறுதியை அளித்துள்ளார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், ''உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'' என்ற திட்டத்தை செயல்படுத்த ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கு இந்திய ஆட்சிப் பணி நிலை அலுவலர் ஒருவரை நியமிக்கும் அரசாணைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.
5. கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் பலரும் அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வரும் நிலையில், பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் இன்னலைக் குறைக்கும் வகையில் சிகிச்சைக்கான மருத்துவமனை கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி மாண்புமிகு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்து வகையான கொரோனா நோய் சிகிச்சை செலவுகளையும் தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு மீள வழங்கும்.



02.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்திறப்பு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு, மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சிப் பானர்ஜி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.08.2021 அன்று 75வது சுதந்திர தினத்தை நினைவு கூறும் வகையில், சென்னை, காமராஜர் சாலை மற்றும் சிவானந்தா சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்திய சுதந்திர தின வைரவிழா தூணை திறந்து வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சுதந்திரத் திருநாள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு அரசின் விருதுகளையும், பதக்கங்களையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றவர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.




## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 699.26 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கி கடன்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன்கள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கி, பல்வேறு நலத்திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரகப் பகுதிகளில் உள்ள 8,210 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தலா ரூ.15,000/– வீதம் 12.32 கோடி ரூபாய் சுழல் நிதி, 8,776 ஏழை எளிய நலிவுற்றவர்களுக்கு தலா ரூ.25,000/– வீதம் 10.97 கோடி ரூபாய் நலிவு நிலை குறைப்பு நிதி, சுய உதவிக் குழு ஒன்றுக்கு தலா ரூ.50,000/– வீதம் 13,255 குழுக்களுக்கு 66.28 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி, பால் உற்பத்தியை பெருக்குவதற்கு ஏதுவாக அசோலா தீவன உற்பத்தி செய்திட 4,043 மகளிருக்கு 2.02 கோடி ரூபாய் நிதி, 186 ஆடு வளர்ப்பு வங்கிகள் அமைத்திட 1.86 கோடி ரூபாய் நிதி, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு குறைந்த கட்டணத்தில் கருவிகளை வாடகைக்கு வழங்கும் வேளாண் கருவிகள் வங்கி அமைக்க 1,427 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 9.61 கோடி ரூபாய் நிதி, தளவாடங்கள், சிறிய இயந்திரங்கள், அடிப்படை கட்டமைப்பு மற்றும் மூலதன நிதி போன்றவற்றிற்காக 3,000 வேளாண் உற்பத்தியாளர் குழுக்களுக்கு 4.82 கோடி ரூபாய் நிதி போன்ற திட்ட உதவிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் உற்பத்தியாளர்களை குழுவாக ஒன்றிணைத்து உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உபரி விளைபொருட்களைத் திரட்டவும், 183 உற்பத்தியாளர் குழுக்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் 1.37 கோடி ரூபாய் திட்ட துவக்க நிதியும், நுண் தொழில் நிறுவன நிதியாக 569 பயனாளிகளுக்கு 1.99 கோடி ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது. வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 10,714 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 464.16 கோடி ரூபாய் வங்கிக் கடன், 73 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 22.16 கோடி ரூபாய் வங்கி பெருங்கடன், 45 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறு தொழில் மேம்பாட்டு கடன் உத்தரவாத நிதியாக 5.24 கோடி ரூபாயும் வழங்கப்பட்டது.

நகர்ப்புரத்தில் உள்ள 590 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தலா ரூ.10,000/– வீதம் 59 இலட்சம் ரூபாய், 151 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதியாக 76 இலட்சம் ரூபாய், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வசிக்கும் 985 நபர்களுக்கு 4.98 கோடி ரூபாய், 528 தொழில் குழுக்களுக்கு 23.36 கோடி ரூபாய், 76 ஒத்த விருப்பக் குழுக்களுக்கு 70 இலட்சம் ரூபாய், 1,470 சுய உதவிக் குழுக்களுக்கு 60.85 கோடி ரூபாய் மற்றும் 43 சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கு 65 இலட்சம் ரூபாயும் தொழில் துவங்கிட வங்கிக் கடனாக வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தீன்தயாள் உபாத்யாய ஊரக திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் திறன் வளர்ப்பு பயிற்சி பெற்ற ஊரகப் பகுதியைச் சார்ந்த வேலைவாய்ப்பற்ற 50 இளைஞர்களுக்கு தனியார் தொழில் நிறுவனங்களில் பணிபுரிய பணி அமர்வு ஆணையினையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் K. கோபால், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா. பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், வத்தல் மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2116 பயனாளிகளுக்கு 16 கோடியே 47 இலட்சத்து 35 ஆயிரத்து 433 ரூபாய் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.11.2021 அன்று வேலூர் மாவட்டம், மேல்மொணாவூரில் நடைபெற்ற அரசு விழாவில், புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கு 3510 புதிய குடியிருப்புகள் மற்றும் ரூ.30 கோடி மதிப்பீட்டில் முகாம்களில் குடிநீர், மின்சாரம், சாலை வசதி போன்ற அடிப்படை திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முகாம்வாழ் தமிழர்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 660 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 2000 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.25.61 கோடி கடன் இணைப்பு ஆணைகளை வழங்கினார்.





75வது இந்திய சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.



## குறளும்-பொருளும்

**அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல்**

தீமை செய்தவர்க்கு அதையே திருப்பிச் செய்யாமலிருத்தலை, எல்லா அறிவிலும் முதன்மையான அறிவு என்று போற்றுவர்.

## உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குதல் | 11 |
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழாவை தொடங்கி வைத்தல் | 16 |
| தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சாதனைகள்...! | 19 |
| திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல் | 30 |


## twitter

“ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்கள் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர் கணக்கில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ”



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.11.2021 அன்று திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.12.2021 அன்று சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 25.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.









# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.12.2021 அன்று திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் 58 ஆயிரத்து 463 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7 இலட்சத்து 56 ஆயிரத்து 142 பயனாளிகளுக்கு 2 ஆயிரத்து 750 கோடி ரூபாய் கடனுதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றம் குறித்தும், சுய உதவிக்குழு இயக்கத்தில் இணைந்து அவர்கள் ஆற்றிவரும் பணிகள் குறித்தும், பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்கு தேவையான உதவிகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களுடன் காணொலி காட்சி வாயிலாக கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 52,574 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 6,29,861 பயனாளிகளுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 2,486 கோடி ரூபாய் வங்கிக் கடன் மற்றும் 30 இ–சேவை மையங்கள் துவக்குவதற்காக 30 பயனாளிகளுக்கு உரிமங்களையும்,

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சுய தொழில் தொடங்க தொழிற்கடனாக நகர்ப்புரத்தைச் சேர்ந்த 931 குழுக்களுக்கு ரூ.26.56 கோடி, 1,381 தனி நபர்களுக்கு ரூ.16.08 கோடி, 4,702 நகர்ப்புர சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 57,451 பயனாளிகளுக்கு தொழில் துவங்கிட வங்கி கடனாக 219 கோடி ரூபாயும்,

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் 69 சமுதாயத் திறன் பள்ளிகள் தொடங்க ரூ.66 இலட்சம் மற்றும் 37 சமுதாய பண்ணை பள்ளிகள் துவங்க ரூ. 26 இலட்சம், உற்பத்தியாளர் குழுக்களுக்கான துவக்க நிதியாக 90 குழுக்களுக்கு ரூ. 68 இலட்சம் மற்றும் தொழிற்குழுக்களுக்கான துவக்க நிதியாக 30 குழுக்களுக்கு ரூ. 23 இலட்சமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வை காணொலி வாயிலாக கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த பயனாளிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. தமிழகம் முழுவதும் 58,463 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7,02,531 உறுப்பினர்களுக்கு ரூ.2749.47 கோடி மதிப்பிலான கடன் உதவிகள் / நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. சா.மு. நாசர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள், அரக்கோணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், திருத்தணி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு. எஸ். சந்திரன் அவர்கள், பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.04.2022 அன்று விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், ஒழுந்தியாம்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில், 42 கோடியே 69 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத் திட்ட உதவிகளை 10,722 பயனாளிகளுக்கு வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 07.04.2022 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் 2022–2023ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நிறைவுற்றதையொட்டி, சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., சிறப்புச் செயலாளர் திருமதி பிங்கி ஜோயல், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இணைச்செயலாளர் திரு. சந்திரசேகர சாகமூரி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் (பொது) திரு. சரவணன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.04.2022 அன்று சட்டப் பேரவையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பான அறிவிப்புகளை விதி 110–ன் கீழ் வெளியிட்டார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.04.2022 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஒன்றியம், செங்காடு ஊராட்சியில், தேசிய ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் கிராம மக்களிடம் கலந்துரையாடினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.04.2022 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஒன்றியம், செங்காடு ஊராட்சியில், தேசிய ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினைப் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.05.2022 அன்று சென்னை, இராணி மேரி கல்லூரியில், கல்லூரி சந்தை – மகளிர் சுய உதவிக் குழுக்களின் விற்பனைக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.04.2022 அன்று தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 10,427 பயனாளிகளுக்கு 71 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.04.2022 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற அரசு விழாவில், 54,230 பயனாளிகளுக்கு 364 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 11.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தேசிய அளவில் சிறப்பாக செயல்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 ஊராட்சிகளுக்கு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் சார்பில் வழங்கப்பட்ட விருதுகளை பெற்ற மாவட்ட ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள் சந்தித்து, விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **21.05.2022** அன்று நீலகிரி மாவட்டம், உதகை அரசினர் கலைக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், **9,500** பயனாளிகளுக்கு ரூ. **28.13** கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கணேஷ், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சா.ப.அம்ரித், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் **30.06.2022** அன்று இராணிப்பேட்டை அரசினர் அண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், **71,103** பயனாளிகளுக்கு **267** கோடியே **10** இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான முதல் இளைஞர் திறன் திருவிழாவை தொடங்கி வைத்து சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 25.66 கோடி வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார்.



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2022–23ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்காக திறன் பயிற்சியளிக்கும் அரசு மற்றும் தனியார் துறைகளையும் ஒருங்கிணைத்து, 388 வட்டாரங்களில் 'இளைஞர் திறன் திருவிழாக்கள்' நடத்தப்படும் என்றும், இளைஞர்கள் அதிக வேலைவாய்ப்புள்ள தொழில்களைப் பற்றி அறிந்து கொள்வதோடு, திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு மற்றும் தகவல்களையும் ஒருங்கே பெறுவதற்கு, இந்தத் திறன் திருவிழாக்கள் பேருதவியாக அமையும். இதற்காக 1.94 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, நம் மாநிலத்தில் உள்ள இளையோருக்கும் மற்றும் திறன் பயிற்சி நிறுவனங்களுக்கும் இணைப்புப் பாலமாக விளங்கும் வகையில் 25.05.2022 அன்று சென்னை, இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவில், இளையோருக்கு திறன் குறித்த ஆலோசனைகளை வழங்க கலந்தாய்வுக் கூடங்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் அரங்குகள் போன்றவை அமைக்கப்பட்டிருந்தன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்பு பொருட்களின் விற்பனை அரங்குகளைத் திறந்து வைத்து பார்வையிட்டதுடன், இளைஞர் திறன் திருவிழா கலந்தாய்வுக் கூடங்களையும் பார்வையிட்டு, இளைஞர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சி சான்றிதழ், தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார். மேலும், 608 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, காய்கறி, பழ வியாபாரம், மளிகைக்கடை, சிறு பெட்டிக்கடை, தையல் நிலையம் போன்ற தொழில்கள் நடத்துவதற்கு 25.66 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.



இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு தொழிலாளர்கள் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., தொழிலாளர்கள் நலன் – திறன் மேம்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி பா.பிரியங்கா, இ.ஆ.ப., இராணி மேரி கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் பா. உமா மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.06.2022 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், **81** கோடியே **31** இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற **140** திட்டப்பணிகளை திறந்து வைத்து, **166.84** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான **1,399** புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, **48,868** பயனாளிகளுக்கு **370** கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.06.2022 அன்று சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், கண்ணமங்கலப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கோட்டை வேங்கைப்பட்டியில் 3 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 100 வீடுகள் கொண்ட பெரியார் நினைவு சமத்துவபுரத்தினை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.06.2022 அன்று திருப்பத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 16,820 பயனாளிகளுக்கு 104 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



26.05.2022 அன்று சென்னை விமான நிலையத்தில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.06.2022 அன்று வேலூர் மாவட்டம், கோட்டை மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 30,423 பயனாளிகளுக்கு 360 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சந்திப்பு



மாண்புமிகுஊரகவளர்ச்சித் துறைஅமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் 02.08.2022 அன்றுபுதுடெல்லியில்ஒன்றியஅரசின் மாண்புமிகுஊரகவளர்ச்சித் துறைஅமைச்சர் திரு. கிரி ராஜ் சிங் அவர்களைசந்தித்து, தமிழ்நாட்டில்ஊரகவளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்தும், மேற்கொள்ளவேண்டியசெயல்பாடுகள் குறித்தும் உரையாடினார். இந்நிகழ்வின்போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளர் திருமதிபி.அமுதா,இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தார்.



# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சாதனைகள்...!

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் தன்னம்பிக்கை மூலம் மகளிரின் நிலையை மேம்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கி, வங்கிக் கடன் இணைப்புகளையும், தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றலை அதிகரித்து, சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செவ்வனே செய்து வருகிறது.

**சுய உதவிக் குழு இயக்கம்**

தொலைநோக்கு பார்வை கொண்ட முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக, தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக் குழு இயக்கம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பின்னர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் வாயிலாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM), தீன்தயாள்உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம் (DDU-GKY) மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.



## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் 388 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

2021–22ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் இலக்கு மக்கள் குடும்பங்களைக் கொண்டு 25,076 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2022–23ஆம் நிதியாண்டில் அனைவரையும் இணைக்க வேண்டும் என்ற நோக்கோடு விடுபட்ட மிகவும் ஏழை, ஏழை, விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற மக்களை கொண்டு விடுபடாமல் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## சுய உதவிக் குழுக்களுக்கான நிதியுதவி




**அ. சுழல் நிதி (RF)**

தர மதிப்பீடு செய்யப்பட்ட மூன்று மாதங்கள் முடிவடைந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றிற்கு ஒரு முறை மட்டும் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிக உறுப்பினர்களுக்கு உள்கடன் வழங்குவதற்கு சுழல் நிதியாக ரூ.15,000 வழங்கப்படுகிறது. 2021–22ஆம் ஆண்டில் 21,598 குழுக்களுக்கு ரூ.32.40 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாய முதலீட்டு நிதி (CIF)**

ஊரகப் பகுதிகளில் ஆறு மாதங்கள் முடிவடைந்த நிலையில் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள குழு ஒன்றிற்கு தலா ரூ.1.50 லட்சம் வீதம் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் சமுதாய முதலீட்டு நிதியாக 32,739 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.255.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### இ. நலிவு நிலைக்குறைப்பு நிதி (VRF)

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோரின் நலிவு நிலையினை குறைப்பதற்கு நுகர்விற்கோ அல்லது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவோ கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் ரூ.10,000/– முதல் ரூ.25,000/– வரை நலிவு நிலை குறைப்பு நிதி வழங்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் 5,838 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ரூ.14.59 கோடி நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது.

### திறன் மேம்பாடு

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, கிராம வறுமை ஒழிப்புச் சங்க புத்தகப் பராமரிப்பாளர்களுக்கான பயிற்சி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கான பயிற்சி, வட்டார அளவிலான கூட்டமைப்பின் புத்தக பராமரிப்பாளர்களுக்கான பயிற்சி முதலிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அவர்களது அறிவு மற்றும் திறமைகளை வளர்த்து திறம்பட பணியாற்றிட உதவுகிறது. சிறந்த மேலாண்மை மற்றும் முடிவெடுக்கும் தன்மை, இலக்கு மக்களிடையே உருவாக்க பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் மூலம், சமூக மூலதனம் இலக்கு மக்களிலிருந்து கடைநிலை மக்கள் வரை சென்றடைய வழிவகை செய்துள்ளது.



### புதிய சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான அடிப்படை பயிற்சி

2021–22ஆம் ஆண்டில் புதியதாக உருவாக்கப்பட்ட 13,430 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்கள் அடிப்படை பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.338 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஊக்குநர் மற்றும் பிரதிநிதிக்கான பயிற்சி

2021–22 ஆம் ஆண்டில் புதியதாக உருவாக்கப்பட்ட 13,430 சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கு மூன்று நாட்கள் பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி

2021–22ஆம் ஆண்டில் 49,148 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி இரண்டு நாட்கள் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.147.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி

2021–22ஆம் ஆண்டில் 1,544 வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் அலுவலக நிர்வாகிகளுக்கு ஆளுமை மற்றும் நிதி மேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.4.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு விருதுகள் வழங்குதல்

மணிமேகலை விருதுகள் வழங்கும் திட்டம் கடந்த 2006–07 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. இவ்விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மேன்மேலும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கும் விதமாக இருந்தது. சிறிது காலம் கைவிடப்பட்ட இத்திட்டம் 2021–22ஆம் ஆண்டு முதல் மீண்டும் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகள் சமுதாயத்தில் மகளிரின் பொருளாதார மேம்பாடு விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற பிரிவினருக்கான சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டில் இவர்களின் பங்களிப்பு மற்றும் பணிகளை அங்கீகரித்து அவர்களை பாராட்டும் விதமாக விருதுகள் வழங்கப்படும்.

சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளை ஊக்குவிக்கவும் செயல்பாடுகளை அங்கீகரிக்கவும் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் ரொக்க விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன்

தமிழ்நாடு மாநில மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது ஏழை மக்களின் நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிக்கும்

பொருட்டு வங்கி சேமிப்பு கணக்கு துவங்குதல், உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான வங்கி கடன் பெற வழிவகுத்தல், காப்பீட்டு சேவைகளை வழங்குதல் மற்றும் ஓய்வூதிய பலன்களை கிடைக்கச் செய்தல் ஆகிய முக்கிய நிதி சேவைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வருகிறது.

**சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இடைநிலையர்களாக செயல்பட்டு, வங்கிகளில் பெருங்கடன் பெற்று, சுய உதவிக் குழுக்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமாக, அதிக வட்டியில் கடன் வழங்கும் தனிநபர்களின் பிடிக்கு இரையாகாமல் சுய உதவிக் குழுக்கள் தடுக்கப்படுகின்றன.

கடந்த 20 ஆண்டுகளில் 35,45,343 சுய உதவிக் குழுக்களுக்கு 96,419.72 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2021–22ம் ஆண்டில், சுய உதவிக் குழுக்களின் கடன் இணைப்பு இலக்கீடான ரூ.20,000 கோடியில் 4,08,740 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.21,392.52 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 01.04.2022 முதல் 31.05.2022 வரை 22,351 குழுக்களுக்கு 1,009.46 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சுய உதவிக் குழுக்களுக்கு எளிதாக, குறைந்த வட்டி விகிதத்தில் அதிக அளவிலான கடன் கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஐ.டி.பி.ஐ. வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, பேங்க் ஆஃப் பரோடா, பாரத ஸ்டேட் வங்கி, யூகோ வங்கி மற்றும் தமிழ்நாடு கிராம வங்கி ஆகிய வங்கிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

குறைந்த வட்டி விகிதத்தில், போதுமான அளவு கடனை கால தாமதமின்றி அனுமதித்தல் போன்ற அம்சங்களை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளது. இதர பிற வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

ஏழை எளிய மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் வங்கி கடன் வழங்கும் பொருட்டு, ரூ.3.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு வட்டி மானியம் வழங்கப்படுகிறது. 2021–22ம் ஆண்டில், 1,62,069 சுய உதவிக் குழுக்களுக்கு 27.12 கோடி ரூபாய் வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.





**வாழ்வாதார மேம்பாடு**

ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழை மக்களின் குடும்பங்களுக்கு கடினமான காலக்கட்டங்களில் குறைந்தபட்ச வருமானத்தை உறுதி செய்ய ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 அல்லது 3 வாழ்வாதார நடவடிக்கைகள் இருப்பதை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் பண்ணை சார் நடவடிக்கைகள் மற்றும் பண்ணை சாரா நடவடிக்கைகள் என இரு பெரிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

**பண்ணை சார் நடவடிக்கைகள்**

பண்ணை வாழ்வாதார நடவடிக்கைகளாவது பயிர் உற்பத்தி, முதல்நிலை மதிப்பு கூட்டுதல் மற்றும் மதிப்பு சங்கிலி மேலாண்மை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. பண்ணை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகப்படியான கிராமப்புற மகளிர்கள் தொழிலாளியாகயிருந்து பயிர் சாகுபடியாளராகவும், விவசாய தொழில் முனைவோராகவும் மாறி வருகின்றனர்.

**உற்பத்தியாளர் குழுக்கள்**

ஒரே வகையான பயிர் சாகுபடியில் ஈடுபட்டு, ஒரே மாதிரியான வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சந்திக்கும் மகளிர் விவசாயிகளை உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்படுகின்றனர். இந்த உற்பத்தியாளர் குழுக்களுக்கு அவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்காக ரூ.2.00 லட்சம் செயல்பாட்டு மூலதனம் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவுக்காக சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. நிதி ஆதரவு தவிர, வணிகத் திட்டம் தயாரித்தல், தொழில் மேம்பாட்டிற்கான பொருட்களை அடையாளம் காண்பது மற்றும் புதிய தொழில்நுட்ப நடவடிக்கைகள் குறித்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில், 5,800 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவைகளுக்கு செயல்பாட்டு மூலதனம், உள்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூ.116 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்**

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகளை ஒத்திசைவுடன் சீரமைக்கும் முறையின் பலனை பெறுவதற்காக, விவசாயம் சார்ந்த பண்ணை நடவடிக்கைகள் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. இதில், உயிர் உரம்

பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவுகள் குறைக்கப்பட்டு பல்வேறு வருமானம் ஈட்டும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. 2 முதல் 3 கிராம ஊராட்சிகளிலிருந்து, சுமார் 250 மகளிர் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு தொகுப்புக்கு ரூ.20 இலட்சம் வீதம் வாழ்வாதார சேவை மையம் அமைக்கவும், கால்நடைகள் வாங்கவும், ஊடு பயிர்கள் பயிரிடவும், இயற்கை இடு பொருட்கள் தயாரிக்கும் அலகுகள் அமைக்கவும், இயந்திர வாடகை மையம் ஏற்படுத்தப்படவும், பயிற்சிகள் வழங்கவும், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக குறியீடு இடுதல் ஆகியவற்றிற்கும் வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில், 185 ஒருங்கிணைந்த விவசாயத் தொகுப்புகள் கண்டறியப்பட்டு அவற்றிற்கு திறன் மேம்பாடு மற்றும் சமூக முதலீட்டு ஆதரவுக்காக ரூ.22 கோடி நிதி விடுக்கப்பட்டுள்ளது.

**இயற்கை வேளாண் தொகுப்புகள்**

இயற்கை விவசாயம் என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாத்து அதிக மதிப்புள்ள இயற்கை விளைப் பொருட்களை இரசாயனமற்ற பாரம்பரிய விவசாய முறையில் உற்பத்தி செய்யும் வேளாண்மை முறையாகும். இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள அடுத்தடுத்த கிராமங்களைச் சேர்ந்த மகளிர் விவசாயிகள் கொண்ட குழுவுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பதிவு செய்தல், சான்றிதழ்கள் பெறுதல், இயற்கை இடு பொருள் அங்காடி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை முறை அமைப்பதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது.



2021–22ஆம் ஆண்டில் 50 இயற்கை வேளாண் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு ''சாத்தியக்கூறு சான்றிதழ்கள்'' பெறப்பட்டுள்ளன. திறன்மேம்பாடு, பதிவு மற்றும் சந்தைப்படுத்தல் ஆதரவுக்காக ரூ.3 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஊட்டச்சத்து தோட்டங்கள்**

பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து பற்றாக்குறையை போக்குவதற்காக 4,000 கிராம பஞ்சாயத்துகளில் 2,00,000 கிராமப்புற வீடுகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி வழங்குவதற்கும், விதைகள் வாங்குவதற்கும் ரூ.1 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.



**பண்ணை சாரா நடவடிக்கைகள்**

கிராமப்புறங்களில் உள்ள ஏழைகளுக்கு பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கை ஒரு முக்கியமான வாழ்வாதாரமாகும். உற்பத்தி அலகுகள், சேவை மற்றும் வர்த்தக துறையில் மகளிர் தலைமையிலான நுண் மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது.

**வட்டார வணிக வள மையம் (BBRC)**

வட்டார வணிக வள மையங்கள் வட்டார அளவிலான குழுக் கூட்டமைப்பு நிர்வாகிகளால் நிர்வகிக்கப்பட்டு கிராமப்புற மகளிரின் தொழில் மேம்பாட்டு நடவடிக்கைக்கு வழிகாட்டப்படுகிறது. இந்த மையம் வங்கி, நிதி, சட்டம் போன்ற பல்வேறு செயல்பாட்டு வல்லுநர்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டு புதிய மற்றும் செயல்பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு வணிக திட்டம் தயாரித்தல், சந்தைப்படுத்துதல், சட்டபூர்வ பதிவுகள், உரிமம் மற்றும் தர மேம்பாட்டிற்கு உதவி புரிகின்றன. இந்த அமைப்பின் மூலம் 2021–22ம் ஆண்டில் 37 மாவட்டங்களில் 89 வட்டாரங்களில் 9,750 மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

**தொழில் தொகுப்புகள் உருவாக்குதல்**

தொழில் தொகுப்பு உருவாக்கத்தின் நோக்கமானது, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதும், ஒரே இடத்தில் உள்ள வளங்களைத் திரட்டுவதன் மூலம் இலாப வரம்பை அதிகரித்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதே ஆகும். அமைப்பு சாரா தொழில் நிறுவனங்களுக்கு கிராமப்புறப் பொருளாதாரத்தில் அணுகுமுறை வளர்ச்சி, சந்தை அணுகுமுறை மற்றும்






பொதுவான வசதி மையங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கிறது.

2021–22 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 148 தொழில் தொகுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் தொகுப்புகளில் சிறப்பாக செயல்படக் கூடிய தொழில்களைக் கண்டறிவதற்கு சாத்தியகூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தொழில் தொகுப்பிற்கும், தமிழ்நாடு ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தவும், மூலதன நிதியாகவும் ரூ.2.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 148 தொழில் தொகுப்புகளுக்கு பயிற்சி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.37 கோடி நிதி அளிக்கப்பட்டுள்ளது. 148 தொழில் தொகுப்பிலிருந்து 36 மாவட்டத்திற்கு தொழில் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் பங்கு தொகையாக ஒவ்வொரு தொழில் தொகுப்பிற்கும் ரூ.27.50 இலட்சம் வீதம் பெறுவதற்கு உண்டான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

### தொழில் முனைவோருக்கு தொழில் நுட்ப பயிற்சி

ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் தேவையின் அடிப்படையில் 5 நாட்கள் தொழில் நுட்ப பயிற்சி சென்னை சமுதாய கல்லூரி மற்றும் TANSTIA-FNF என்ற சேவை அமைப்பு மூலம் அளிக்கப்பட்டது. இதுவரை 31,900 தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் மூலம் தொழில் முனைவோர்கள் மேம்பாடு அடைவதுடன் அவர்களுடைய தொழில் பற்றிய நுட்பங்களை கற்றுத் தேர்ந்துள்ளனர்.

### மகளிர் சுய உதவிக் குழுத் தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல்

கிராமப்புற மகளிரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு



தேவையும், சந்தை வாய்ப்புகளும் அதிக அளவில் உள்ளன. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சந்தைப்படுத்துதலை மேம்படுத்த விற்பனை வளாகங்கள் அமைத்தல், மதி அங்காடிகள் மற்றும் கண்காட்சிகள் நடத்துதல் ஆகியவற்றை மேற்கொள்வதோடு, சந்தை நுண்ணறிவு, பொருட்களின் ஆய்வு, மதிப்புக் கூட்டல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மாநில அளவில் நவராத்திரி மற்றும் தீபாவளி கண்காட்சி 2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவதிலுமிருந்து 222 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ.43.73 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சிகள் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்றுள்ளன. இந்தக் கண்காட்சிகளில்




தமிழகத்தைச் சேர்ந்த 26 மகளிர் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு ரூ.17.35 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்து பயனடைந்துள்ளனர்.

மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களான கைவினைப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், அலங்கார சணல் பொருட்கள், சிறுதானியங்கள், செயற்கை நகைகள், கைவினை பொம்மைகள் போன்றவற்றை விற்பனை செய்வதற்காக 137 மதி அங்காடிகள் சுற்றுலா தலங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மதி அங்காடிகள் மூலம் ரூ.54.78 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், இளைஞர் திறன் மேம்பாடு ஊக்குவித்தலின் ஒருபகுதியாக கல்லூரி சந்தையினை சென்னை இராணிமேரி கல்லூரியில் 25.05.2022 அன்று துவக்கி வைத்தார். 25.05.2022 முதல் 05.06.2022 வரை நடைபெற்ற இக்கல்லூரி சந்தையில் 53 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று சுமார் 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்தனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மதி வார சந்தை மாதம் இருமுறை நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சந்தையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வேளாண் உற்பத்திப் பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் நோக்கில், அடுத்த கட்டமாக தங்களின் சுய உதவிக் குழு பொருட்களை பதிவேற்றம் செய்து அமேசான்–காரிகர், பிளிப்கார்ட்–சம்ராத் ஆகிய நிறுவனங்கள் வழி மேற்கொள்வதுடன், அரசின் ஜெம்போர்டல் வழியாகவும் இ–வணிகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

2021–22 நிதியாண்டில், SANFED எனும் கூட்டமைப்பில் உள்ள 65 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 7.57 கோடி மதிப்பிலான 36,08,363 சானிடரி நாப்கின் பாக்கெட்டுகள் தயார் செய்யப்பட்டு, வினியோகமும் செய்யப்பட்டுள்ளது.



**கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு**

பல்வேறு அரசு நலத் திட்டங்களை மக்களிடம் சென்று சேர்ப்பதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் குறிப்பாக உடல் நலம், ஊட்டச்சத்து, மாதவிடாய் சுகாதாரம், பாலின சமத்துவம், சுற்றுப்புறத் தூய்மை போன்ற பணிகளை மேற்கொண்டு, விழிப்புணர்வு செய்வதற்காக 12,525 சமூக வல்லுநர்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 11.59 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

விடுபட்ட இலக்கு மக்களின் உடல் நலம் மேம்பட பாரம்பரிய சத்துணவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கிராம / ஒன்றிய / மாவட்ட அளவில் ஊட்டச்சத்து சமையல் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட 25.60 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுக்கவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கிராம அளவில் சுய உதவிக் குழுவிற்கு ஒரு பாலின பாகுபாடு நீக்க செயல்பாட்டாளர்



ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் ஒன்றிய மற்றும் மாவட்ட அளவில் பாலின மன்றம் ஏற்படுத்தி, இப்பிரச்சனைகளை வரும்முன் தடுத்திடும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்கள் பங்கேற்புடன் கிராம வறுமைக் குறைப்புத் திட்டமானது மேற்கொள்ளப்பட்டு, கிராமத்திலுள்ள ஏழை, மிகவும் ஏழை மற்றும் நலிவுற்றோர்களின் தேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டம் 12,525 கிராம ஊராட்சிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, பிற துறைகளின் பயன்கள் ஊராட்சி மன்றங்கள் மூலம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக 4.07 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்புப் பணிக்காக 37 மாநில வளப் பயிற்றுனர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வட்டாரப் பணியாளர்கள், வட்டார வளப் பயிற்றுனர்கள், கிராம சமூக வளப் பயிற்றுனர்கள் ஆகியோர்களை வழிநடத்தவும், பயிற்சிகள், உணவு மற்றும் ஊட்டச் சத்து, சுகாதாரம், உடல் நலம், சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு ஆகிய தலைப்புகளில் விழிப்புணர்வும் வழங்கி வருகிறார்கள். இதற்காக 81.82 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

## தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டுத் திட்டம் (DDU-GKY)

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் மேம்பாட்டுத் திட்டமானது (DDU-GKY) ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இடையே 60:40 என்ற நிதிப் பகிர்வு முறையைக் கொண்ட வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளின் கீழ் பதிவுப் பெற்ற நிறுவனங்கள் மூலம் திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தபட்சம் 70% கட்டாய பணியமர்வும் அளிக்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

பயிற்சிக்குரிய பாடத்திட்டமானது தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (National Skill Qualification Framework - NSQF) இயைந்த முறையிலும், அவற்றோடு மென்திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி



அறிவு ஆகிய பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி முடிக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது.

2021–22ம் நிதியாண்டில் 14,155 இளைஞர்களுக்கு 27.30 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பிரிவுகளின் கீழ் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களில் 5,986 நபர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



### சுய வேலை வாய்ப்புக்கான பயிற்சிகள்

கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை உருவாக்கிட, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட முன்னோடி வங்கி மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (Rural Self Employment Training Institutes-RSETIs) அமைக்கப்பட்டுள்ளன.

### வேலைவாய்ப்பு முகாம்கள்

படித்த மற்றும் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. முகாமில் பங்கேற்கும் நிறுவனங்கள், அவற்றின் காலிப்பணியிடங்கள், அப்பணிகளுக்குத் தேவையான தகுதிகள், வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் இடம் மற்றும் தேதி போன்ற தகவல்கள் பல்வேறு தகவல் தொடர்பு முறைகள் மூலம் இளைஞர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படுகிறது. மேலும், வேலை தேடும் இளைஞர்களின் கல்வித் தகுதி மற்றும் விருப்பம் அடிப்படையில் தகுதியான வேலையை தேர்ந்தெடுக்க உதவி செய்யப்படுகிறது.

2021–22 ஆம் நிதியாண்டில் மாநிலம் முழுவதும் 50 மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 32,517 இளைஞர்கள் வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்று பயனடைந்துள்ளனர்.

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புர ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வறுமையையும் நலிவு நிலையையும் குறைத்து சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும்.

இத்திட்டம், சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SMID), வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு (ESTP), திறன்





மேம்பாடு மற்றும் பயிற்சி (CBT), சுயவேலைவாய்ப்புத் திட்டம் (SEP), நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் (SUH), நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார திட்டம் (SUSV), புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (ISP) ஆகியவற்றை தன்னுடைய கூறுகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் நகர்ப்புர ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் அமைத்து ஒட்டுமொத்த சமுதாயத்தினை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் சுய உதவிக்குழுக்களுக்கு கட்டாய பயிற்சிகள் வழங்கி மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்பு, தரமதிப்பீட்டின் அடிப்படையில், அக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது.

2021–22ஆம் ஆண்டில் 20,438 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவைகளுக்கு சுழல் நிதியாக 20.44 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

10 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும், அதன் உறுப்பினர் குழுக்களுக்கு முறையான வட்டி விகிதத்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், மற்றும் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 319 பகுதி அளவிலான கூட்டமைப்புகளும், 7 நகர்ப்புற அளவிலான கூட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டு, 319 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதியாக 1.60 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம்**

வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டமானது நகர்ப்புர ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியளித்து சுய தொழில் அல்லது ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து அவர்களின் வருமானத்தை பெருக்கி நிலைத்த வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் தினக்கூலி அல்லது பருவகால தொழில் செய்யக்கூடிய நகர்ப்புர ஏழைகளின் தொழில் பாதிப்புகளை குறைக்கும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில் 15,000 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி வழங்க 31.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 13,146 நபர்களுக்கு 23.33 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி**

நகர்ப்புரத்தில் வறுமையை ஒழிப்பதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவது திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டத்தின் நோக்கமாகும். இந்த உட்கூறின் கீழ் மாநில மாவட்ட மற்றும் நகர அளவில் திட்டத்தினை அமலாக்கம் செய்யும் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் வாயிலாக ஏழை மக்களின் சமூக அமைப்புகளை கட்டமைப்பு செய்து திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வழிவகை செய்கிறது.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டமானது நகர்ப்புர ஏழை குடும்பங்களைச் சார்ந்த தனி நபர் மற்றும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த வேலைவாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கும் குறைவான வருமானத்தில் பணிபுரிபவர்களை அடையாளம் கண்டு அவரவர் திறன் மற்றும் உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார் போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் – தனிநபர் (SEP-I)ன் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 8,538 தனி நபர்களுக்கு 45.15 கோடி ரூபாய், சுய வேலைவாய்ப்புத் திட்டம் – குழு (SEP-G)ன் கீழ் 6,133 தொழில் குழுக்களுக்கு 202.05 கோடி ரூபாய் மற்றும் சுய வேலைவாய்ப்புத் திட்டம் – வங்கி இணைப்பு (SEP-BL)ன் கீழ் நகர்ப்புறங்களில் செயல்படும் 20,082 சுய உதவிக் குழுக்களுக்கு 819.01 கோடி ரூபாய் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் சுய சார்பு நிதி திட்டம் (PMSVANidhi)ன் கீழ் 83,172 தெருவோர வியாபாரிகளுக்கு 83.21 கோடி ரூபாய் வட்டி மானியத்துடன் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.



# வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)



வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் மூன்றாம் தலைமுறை வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அதிகாரம் அளிக்கும் திட்டம் ஆகும். இத்திட்டம், பெண்களை மையப்படுத்திய நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தைப் பெறவும், வாழ்க்கையை ஒளிமயமானதாக மாற்றியமைக்கவும் முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது 31 மாவட்டங்களிலுள்ள (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் நீங்கலாக) 120 ஒன்றியங்களில் 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது.

ஊரகப் பகுதிகளில் சமூகப் பொருளாதார மாற்றத்தையும், தொழில் மேம்பாடு மற்றும் மேல் நோக்கிய வளர்ச்சியையும் தொலைநோக்காகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதி உதவி வழங்குதல், திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி, நிறுவனங்களை நிறுவுதல் ஆகியவை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

**உற்பத்தியாளர் குழு**

உற்பத்தியாளர் குழுவானது – 30 முதல் 150 நபர் வரையிலான உற்பத்தியாளர்களை ஒன்று திரட்டி, உற்பத்தியினை மேம்படுத்துவதால் அதிக வருமானத்தை ஈட்ட வழிவகை செய்கிறது. உற்பத்தியாளர் குழுக்கள்உரிய தகுதியை அடைந்த பின்னர் துவக்க நிதியாக ரூ. 75,000/– வழங்கப்படும். 2021–22ம் ஆண்டில், 2477 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 2000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.15.00 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

**தொழில் குழு**

தொழில் குழுவானது உற்பத்திச் செலவுகளைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும், கூட்டு உரிமை மற்றும் வணிகச் செயல்பாடுகளின் மீதான கட்டுப்பாட்டுடன், வருவாயை அதிகரித்து, இலாபத்தை பகிர்ந்து கொள்ளும் தொழில் நிறுவனம் ஆகும். தொழில் குழுக்கள் உரிய தகுதியை அடைந்த பின்னர், துவக்க நிதியாக ரூ.75,000/– வழங்கப்படும். 2021–22 நிதியாண்டில், 804 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 500 தொழில் குழுக்களுக்கு ரூ.3.75 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

**உற்பத்தியாளர் கூட்டமைப்பு**

உற்பத்தியாளர் கூட்டமைப்பானது உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து, மதிப்புக் கூட்டல், சந்தைப்படுத்துதல் மற்றும் பொருளாதார சேவை வழங்குதல் ஆகியவற்றினை ஒருங்கிணைக்கும் உயர்நிலை நிறுவனமாகும். உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உரிய தகுதியை அடைந்த பின்னர், துவக்க நிதியாக ரூ.30.00 இலட்சம் வழங்கப்படும். 2021–22 நிதியாண்டில், 15 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் நிறுவன சட்டம் 2013–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி**

வாழ்வாதார மேம்பாட்டிற்கும் வருமானத்தை உயர்த்துவதற்கும் ஏழை எளிய மக்களின் திறனை அதிகரிக்கவும் திறன் பயிற்சி முக்கிய தேவையாகும். ஊரகப் பகுதிகளில் வசிக்கும் திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் மூலம் சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

ஊராட்சி / வட்டார அளவில் தொன்மையான கைவினைத் தொழில்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் அதிக வருமானம் ஈட்டும் தொழில் முனைவோர்களில் அனுபவமுள்ள பயிற்றுநர்களைக் கண்டறிந்து, குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளை உருவாக்கி, இளைஞர்கள் வேலை வாய்ப்பு மற்றும் சுய தொழில் தொடங்குவதற்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக சமுதாயத் திறன் பள்ளிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2021–22 ஆம் ஆண்டில், 640 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு 14,654 ஊரக இளைஞர்களுக்கு ரூ.4.94 கோடி செலவில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

நிபுணத்துவம் பெற்ற புதிய யுத்திகளைக் கையாளும் மற்றும் பிற விவசாயிகள், உற்பத்தியாளர்களுக்கு தொழில் நுட்ப அறிவைக் கற்றுக் கொடுக்கும் திறன் கொண்ட விவசாயிகளால் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

2021–22 ஆம் நிதியாண்டில், 1,503 சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 46,288 உறுப்பினர்களுக்கு வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் தொடர்பான பயிற்சிகள் ரூ.10.56 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

2021–22 ஆம் நிதியாண்டில், 1,607 தொழில் முனைவோர்களுக்கு, தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.0.31 கோடி மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்



மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 31.07.2022 அன்று சிவகங்கை பழைய ஊராட்சி மன்ற கட்டிடத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, வேலை வாய்ப்பற்ற நகர்ப்புர இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் நேஷனல் அகாடமி பயிற்சி நிறுவனத்தின் மூலம் 50 மகளிருக்கு தையற்கலை வல்லுநர் பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து, பயிற்சியாளர்களுக்கு இலவசமாக பயிற்சி பெறுவதற்கான சான்றிதழ், சீருடை மற்றும் பயிற்சி உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 17.08.2022 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள், சக்கிமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கிப் பெருங்கடனாக ரூ.36 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் – திட்ட இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், மகளிர் திட்ட இயக்குநர் திரு. காளிதாசன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர் திருமதி. மரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் ஆய்வு



சிவகங்கை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர்.பெரியகருப்பன் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை ஆய்வு செய்திட மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை ஆய்வு செய்திட வருகை தந்திருந்தனர். அப்போது நடைபெற்ற நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 188 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 6.84 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்பும், DDU–GKY திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதற்கான ஆணைகளும், கணிப்பொறி பயிற்சி பெறுவதற்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், நாகப்பட்டிணம் மாவட்டஆட்சியர் மரு.அ.அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள், சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் 05.08.2022 அன்று திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர்கள் திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி இளைஞர் திறன் திருவிழாவைத் துவக்கி வைத்து பயிற்சி பெறுவதற்கான சான்றிதழ்களையும், பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களையும் வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு.அ.இலட்சுமணன், மகளிர் திட்ட இயக்குநர்/இணை இயக்குநர் திருமதி.பா.மதுமதி, ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.பிரேமா ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

---



மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி.கே.எஸ்.மஸ்தான் அவர்கள் 27.07.2022 அன்று விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழா நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிக்கான காசோலைகளையும், வேலைவாய்ப்புத் திறன் பயிற்சிகள் பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். இந்நிகழ்வின் போது, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, செஞ்சி ஒன்றியக் குழு பெருந்தலைவர் திரு. விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. மொக்தியார் அலி மஸ்தான், உதவித் திட்ட அலுவலர் திரு.கௌதமன் ஆகியோர் உள்ளனர்.

---



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்ககத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற இளைஞர்கள் திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தின் கீழ் இளைஞர் திறன் திருவிழா 02.07.2022 அன்று நாகப்பட்டினம் ஏ.டி.எம். மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இவ்விழாவில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி பெறுவதற்கான சான்றிதழ்கள் வழங்கினார். இவ்விழாவில் கலந்து கொண்ட 535 இளைஞர்களில் 279 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்திட 11 பயிற்சி நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டன.



# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் 14.08.2022 மற்றும் 15.08.2022 ஆகிய நாட்களில் விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். ஆய்வின் முதற்கட்டமாக ஒலக்கூர் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒருங்கிணைந்த பண்ணையில் உள்ள வட்டார நாற்றங்கால் பண்ணை, கோவை பந்தல், சீரமைக்கப்பட்ட கிணறு, முருங்கை ஆகியவற்றை ஆய்வு செய்யப்பட்டதுடன், ஒருங்கிணைந்த பண்ணை உறுப்பினர்களுடன் கலந்தாய்வும் நடத்தப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற ஆய்வில், விழுப்புரம் மாவட்ட வணிக வளாகத்தினை பார்வையிட்ட மேலாண்மை இயக்குநர் அவர்கள், மைலம் வட்டாரம் அவ்வையார் குப்பம் ஊராட்சியில் சுதந்திர தின கொடியேற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். பின்னர் அவ்வையார் குப்பத்தில் TNSRLM பணிகளை ஆய்வு செய்ததுடன், மயிலம் வட்டாரம் பெரியதச்சூர் ஊராட்சியில் அமைக்கப்பட்டிருந்த விதை உற்பத்தி அலகு, ஊட்டச்சத்து தோட்டம், உயிர் பல்வகைமை பதிவேடுகள் போன்றவற்றினை மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் திருமதி.காஞ்சனா, உதவி திட்ட அலுவலர்கள், மாநில வளப் பயிற்றுனர் மற்றும் வட்டார பணியாளர்கள் உடன் இருந்தனர்.



# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## சாட்டை தயாரிக்கும் தொழிலில் கிடைத்த வெற்றி...

எனது பெயர் நர்மதாதேவி. நான் மதுரை மாவட்டம். கள்ளிக்குடி வட்டாரத்திலுள்ள செங்கப்படை பஞ்சாயத்தில் செங்கப்படை கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் திரு.கண்ணதாசன், தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

நான் 2018–ல் டான்வா மகளிர் சுய உதவிக் குழுவில் 5 உறுப்பினர்களுடன் சேர்ந்தேன். ஆரம்பத்தில் ரூ.100/– மட்டுமே சேமிப்பு செய்து வந்தோம். மகளிர் திட்டத்தின் மூலமாக பல்வேறு பயிற்சி எடுத்துக் கொண்ட எனக்கு ஏதாவது தொழில் துவங்கி முன்னேற வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. எனது விருப்பத்தை எனது கணவரிடம் கூறியபோது அவரும் என்னை ஊக்குவித்தார்.

பின் கற்றாழை நாரில் சாட்டை செய்வது பற்றியும் அதற்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகமாக உள்ளதாகவும் அறிந்து கொண்டு மதுரையில் பயிற்சி பெற்றேன். பயிற்சிக்குப் பின் எனது சொந்த இடத்தில் கற்றாழை நாரிலிருந்து சாட்டை தயாரிக்கும் தொழிலை துவங்கினேன். இதற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் ரூ.50,000/– கடனும், ஸ்டேட் வங்கி மூலம் ரூ.75,000/– கடனும் பெற்று சாட்டைக்கான மூலப்





பொருட்களை கர்நாடகா மற்றும் சென்னையிலிருந்து வாங்கினேன்.

எனது கிராமத்தில் உள்ள நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த 11 பெண்களை தேர்வு செய்து பயிற்சியளித்து அவர்களை கொண்டு சாட்டை தயாரித்து வருகிறேன். தயாரிக்கப்பட்ட சாட்டைகளை சென்னையில் உள்ள Vivi Exports மற்றும் Kayalvizhi Exports மூலமாக மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்து வருகிறேன். ஒரு சுழற்சிக்கு 7000 பீஸ் வரை அனுப்புகிறேன். இந்த சாட்டை மலேசியா நாட்டின் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடனாக செலுத்தப்படுகிறது, சாட்டையினை அந்நாட்டு மக்கள் விரும்பி வாங்கி பயன்படுத்துவதால் தேவை அதிகம் உள்ளது.

இதன் மூலம் எனக்கு மாதம் சராசரியாக ரூ.40,000/– வரை நிகர இலாபம் கிடைக்கிறது. இந்த தொழிலின் மூலம் 15 நரிக்குறவர் குடும்பங்களுக்கு மாதம் ரூ.9000/– வரை கூலி கிடைப்பதால் அவர்கள் பல கிராமங்களுக்கு குடிபெயர்ந்து செல்வது இல்லை. அவர்களுக்கு சொந்த ஊரிலேயே நிலையான வாழ்வாதாரம் ஏற்பட்டுள்ளது.

எனது குடும்பத்தின் வாழ்வாதாரம் பெரிதும் அதிகரித்துள்ளதால் சமூகத்திலும் எனக்கு மதிப்பும் மரியாதையும் நல்ல அந்தஸ்து ஏற்பட்டுள்ளது. எனக்கு வழிக்காட்டிய மகளிர் திட்டத்திற்கும், நிதி உதவி செய்த வங்கிக்கும், சுய உதவிக் குழுவிற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

– நர்மதாதேவி,
மதுரை மாவட்டம்.

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

## வாழ்நாள் கனவை நினைவாக்கிய இயக்கம்



திருப்பத்தூர் நகராட்சி, ரெட்டை மலை சீனிவாசன் பேட்டை பகுதியில் செயல்படும் கோல்டன் மகளிர் மன்றத்தின் உறுப்பினர்களில் நான்கு நபர்கள் ஒன்றிணைந்து தங்களின் வாழ்நாள் கனவை நனவாக்கி வெற்றி கண்டுள்ளனர்.

இக்குழுவினர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுவைத் துவக்கி, சேமிப்பு மற்றும் தொழில் துவங்க ஆலோசனை பெற்றனர். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் இலவசமாக பயிற்சியினைப் பெற்றனர். தொடர்ந்து இந்தியன் வங்கி மைக்ரோசாட் கிளை மூலம் ரூ.7,50.000/– கடன் பெற்று, அந்தத் தொகையை முதலீடாகக் கொண்டு டைலரிங் யூனிட் துவங்கி, மாதந்தோறும் ரூ.6,500/– வரை நிலையான வருவாய் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகின்றனர். தங்களுக்கு பயிற்சி வழங்கி, தொழில் செய்திட ஊக்கம் அளித்து, வங்கிக் கடன் பெற்றிட வழிகாட்டி, தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, தங்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு கோல்டன் மகளிர் மன்றத்தின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வெண்தாமரை மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக்கதை

நகர்ப்புர பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காக செயல்பட்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் சென்னை பெருநகரப்பகுதி மண்டலம் 4ல் செயல்பட்டு வரும் வெண்தாமரை மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றி குறித்து, அக்குழுவின் உறுப்பினர்கள் கூறுவதை கேட்போம் வாருங்கள்.

“சென்னை, பழைய வண்ணாரப்பேட்டையில் வசித்து வரும் நாங்கள் கொரோனா காலங்களைத் தொடர்ந்து மிகவும் வறுமை நிலையில் இருந்தோம். இந்த நிலையில் எங்கள் குடும்பத்திற்கு எங்களது குடும்பத் தலைவர்களின் வருமானம் போதுமானதாக இல்லாததால் குடும்பம் நடத்துவதற்கு போதிய நிதி நிலை பற்றாக்குறையை ஈடுகட்ட ஒரு யோசனை தோன்றியது. அதனால் ஒரே பகுதியை சார்ந்த மகளிர்கள் ஒருங்கிணைந்து சுய உதவிக் குழு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் தொழில் நடத்தி இலாபம் ஈட்டலாம் என்று தீர்மானித்து “வெண்தாமரை மகளிர் சுய உதவிக் குழு” என்ற பெயரில் குழு தொடங்கி செயல்பட்டு வருகிறோம்.







சென்னை நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் அறிவுரைப்படி உதவித் திட்ட அலுவலர்கள் வழிகாட்டுதலுடன் வெண்தாமரை மகளிர் சுய உதவிக் குழுவினைச் சேர்ந்த பத்து உறுப்பினர்கள் சென்னை கூட்டுறவு வங்கியில் கடன் தொகையாக ரூ. 5,00,000/– பெற்று பேக்கரி பொருட்கள் தயாரித்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயல்படுவதன் மூலம் தொழிலில் இலாபம் ஈட்டுவதுடன், உறுப்பினர்களது பொருளாதார நிலையும் மேம்பாடு அடைந்துள்ளது. விற்பனைத் தொகையில் ஈட்டப்படும் இலாபத் தொகையை மறுபடியும் தயாரிப்புகளுக்கு முதலீடாகப் பயன்படுத்தி வருகிறோம். எங்களின் வெண்தாமரை மகளிர் குழுவின் தயாரிப்பு பொருட்களை ஆர்டரின் பெயரில் தயாரித்து வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். எங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் குழுவின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று வெண்தாமரை மகளிர் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

# வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

## வைகா உற்பத்தியாளர் நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம்.

தாமிரபரணி வளமூட்டும் நெல்லையிலே, வள்ளியூர் வட்டாரத்தில், 1,052 பங்குதாரர்களுடன், ஐந்து முழு நேரப் பணியாளர்களைக் கொண்டு, 10.52 இலட்சம் பங்கு மூலதனம் திரட்டி இயற்றப்பட்டதே “வைகா உற்பத்தியாளர் நிறுவனம்”. வேளாண் உற்பத்திகளைத் திரட்டி, முதல் நிலை / இரண்டாம் நிலை செயல்முறைக்கு உட்படுத்துதல்; பல்வேறு இடங்களில் உற்பத்தித் தேனைத் திரட்டி, மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல் ஆகியவை இவர்களின் முதன்மை நோக்கங்களாக இருந்தன. அதற்கு வேண்டிய பல்லரைப்பான், எண்ணெய் ஆலை ஆகியவற்றையும் வைத்திருந்தனர்.



அடுத்தகட்டமாக முருங்கையைக் கொண்டு, பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களைச் செய்து வருகின்றனர். முருங்கை இலைப்பொடி, முருங்கை விதைப்பொடி, முருங்கை எண்ணெய், முருங்கை முகஅழகுக் களிம்பு, முருங்கைவலி நிவாரணி ஆகியவற்றையும் செய்யத் தொடங்கினர். இவற்றோடு, மூலிகை சோப், நெல்லிக்காய் தேன், வாழைத்தேன் முதலியற்றையும் உற்பத்தி செய்கின்றனர்.




2016 முதல் தட்பவெப்ப சூழலுக்கேற்ப, இயற்கை வேளாண்மை முறையில், பசுமையான தழைக்கூளம் இடுதல் – சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய நீர்சேமிப்பு முறைகளை ஊக்குவிக்கிறது. இயற்கை பொருட்களை விற்பனை செய்ய, உறுப்பினர் உழவர்களுக்கு கடை வைத்தும் கொடுத்துள்ளது. கூடவே நிறுவன மகளிருக்கு, இயற்கை முறையில் முருங்கை உற்பத்தி செய்ய வைத்து, விளைச்சலை வாங்கிக் கொள்ளும் உறுதியையும் அளிக்கிறது. முருங்கைக் கீரைக்கு மதிப்பு கூட்டுதல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது.

பேரிடர் காலத்திற்கு சற்று முன்புதான், இந்நிறுவனம் வைகா தயாரிப்புகளை சந்தையில் அறிமுகப்படுத்தியது; தொடர்ந்து ஏற்பட்ட பேரிடர், முருங்கைப் பயிரிடும் குத்தகை நிலங்களுக்கான வாடகையைச் செலுத்தவும் வழியில்லாத சூழலை ஏற்படுத்தியது. அப்போதுதான் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து, இந்த உற்பத்தியாளர் நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு வரும் உழவர் உற்பத்திக் குழுவினரில் குறிப்பிட்ட குழுவினருக்கு முருங்கை பயிரிடத் தேவையான எந்திரங்கள் வாங்க, ரூ.1.5 லட்சம் நிதியுதவி கிடைக்கப் பெற்றது. இது அவர்களை, சமூக / பொருளாதார சவால்களை எதிர்கொள்ள வைத்தது.

உழவுக்கான டிரெய்லர், தோட்டக் கருவிகள், உழவுகைப் பொறி (Power Weeder) முதலிய இயந்திரங்களை வாங்க இத்தொகை பயன்பட்டது. இதற்கு முன்பு, மேற்சொன்ன கருவிகளை வாடகைக்குப் பிடிப்பதால், ஏற்பட்ட செலவுகள் குறைந்து, காலத்தையும், ஆளாற்றலையும் (மேன்–பவர்) சேமித்தது. ஆஹார் வர்த்தக கண்காட்சியில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்த, இவர்களது விற்பனைச் சந்தை மாநிலம் எங்கும் விரிந்தது.

சுற்றுச்சூழலுக்குத் தோழமையாகவும், சட்ட திட்டங்களுக்கு இணக்கமாகவும் செயல்படும் இந்நிறுவனம், தனது செயல்பாட்டிற்காக, ’B’ தர மதிப்பையும், பசுமை செயல்பாட்டிற்காக ’G3’ தர மதிப்பையும் பெற்றுள்ளது.

எண்ணெய் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த FSSAI, ஏற்றுமதிக்கு AGMARK மற்றும் IEC ஆகிய அரசு உரிமங்களைப் பெற்றுள்ளது. பசுமை விருதுகளோடு, பரிசுத் தொகையாக (Cash Award) ரூ. 2.5 லட்சம் பெற்றுள்ளது. ஈராண்டுக்குள் ரூ. 26 லட்சம் விற்று முதல் பெற முடிந்த இந்நிறுவனம், தன் தொலைநோக்கை எட்டிப் பிடிக்க, VKP திட்டத்திடமிருந்து நம்பகமான வழிகாட்டுதலை எதிர்பார்க்கிறது.



Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,

Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (90,000 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,1 Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN